## கோலாலம்பூர் மாநகரை சிறந்த சுற்றுலா தலமாக உருவாக்க

# மாநகர மன்றத்தின் இணையத்தளம்





கோலாலம்பூர், மார்ச் 27-
கோலாலம்பூருக்கு வருகை தாருங்கள் என்ற ஒரு இணையத்தளத்தை கோலாலம்பூர் மாநகர மன்றம் தொடங்கியிருக்கிறது. மாநகரில் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்க இந்த இலக்கவியல் தளம் உருவாக்கப்பட்டிருப்பதாக மேயர் மைமுனா ஷரிப் தெரிவித்தார்.

கோலாலம்பூர் மாநகரில் சுற்றிப்பார்க்க வேண்டிய இடங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள், பல்வேறு நடவடிக்கைகள் நகரில் நேரில் பார்த்து அறிய வேண்டிய பெற வேண்டிய அம்சங்களை உள்ளடக்கி இந்த தளம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வரும் 2026 ஆம் ஆண்டை மலேசியாவுக்கு வருகை புரியும் ஆண்டாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ள நிலையிலும் ஆசியானுக்கு மலேசியா தலைமையேற்றுள்ள நிலையிலும் இந்த தளம் உருவாக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

மாநகர மன்றத்தின் கலை கலாச்சார நடவடிக்கைகள், சுற்றுலா நடவடிக்கைகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவையும் ஆண்டு முழுதும் இதில் வெளியிடப்படும். சுற்றுலாத்துறையின் லட்சியத்திற்கு உறுதுணையாகும் வகையில் கோலாலம்பூர் மாநகர மன்றம் நகரை ஒரு சுற்றுலா மையமாக மாற்றும் முயற்சிகளுக்கு துணை நிற்கும்.

கோலாலம்பூர் மாநகர் மன்றம் இதற்கென 2 சிறப்பு குழுக்களை உருவாக்கியிருக்கிறது. நகர்ப்புற அழகுப் படுத்தும் நடவடிக்கை குழு நகர்ப்புற நல்வாழ்வு நடவடிக்கை குழு ஆகிய இரண்டும் இந்த பணியில் ஈடுபடும்.

கோலாலம்பூர் சுற்றுலா நடவடிக்கை திட்டத்தை வரும் 2030 ஆம் ஆண்டு வரை முன்னிறுத்தி செல்ல மாநகர மன்றம் உறுதி கொண்டுள்ளது என்றார் அவர்.

அடுத்த 15 ஆண்டுகளில் கோலாலம்பூரை சுற்றுப்பயணிகளின் ஒரு சிறந்த மையமாக உருவாக்க முடிவு செய்துள்ளோம் என்றார் அவர்.